489—

வேதாரண்யம் கடலோர விளை நிலங்களில் கடல் நீர் உட்புகுதல்.

* 22622—திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலோரப் பகுதியான வேதாரண்யம் தொகுதி விவசாயிகளின் விளை நிலங்களில் அடிக்கடி கடல்நீர் உட்புகுந்து பாதிக்கப்படுவதால் அதிகளவு இலவசமாக ஜிப்சம் வழங்கிட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் :

கடல்நீர் பாதிக்கப்படும் நிலங்களுக்கு ஜிப்சம் அளிப்பதனால் அந்த பாதிப்பினை நிவர்த்தி செய்ய இயலாது. கடல் நீர் உட்புகுவதால் மண்ணின் மேற்பரப்பில் உப்பு தங்கி விடுகிறது. இதனைக் களைய நல்ல நீரைப் பாய்ச்சினால் போதுமானது.

500—

காட்டுமன்னார்கோயில் தொகுதி, அண்ணாமலை நகரியத்தில் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குதல்.

* 21130—திரு என். ஆர். ராஜேந்திரன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோயில் தொகுதி, அண்ணாமலை நகரியத்தில் குடிநீர்ப் பாற்றாக்குறை உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைத் தீர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): ஆம் இப்பற்றாக்குறையைப் போக்க அண்ணாமலை நகர் நகரியத்திற்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி மற்றும் சிதம்பரம் நகராட்சியில் குடிநீர் வசதியை மேம்படுத்தும் பொருட்டு ரூ. 245.00 இலட்சங்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்ட உத்தேச மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.